

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.2.2026) பெருநகர சென்னை மாநகராட்சியின் கொருக்குப்பேட்டை மணலி சாலையில் புதிய பாலத்திற்கு அருகில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே. சேகர் பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி. சேகர், எபிநேசர், ஆர். மூர்த்தி, துணை மேயர் மு. மகேஷ்குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.02.2026) பெருநகர சென்னை மாநகராட்சியின் கொருக்குப்பேட்டை எண்ணூர் நெடுஞ்சாலையில் இரயில்வே 2ஏ சந்திக்கடவில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மேம்பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி. சேகர், எபிநேசர், ஆர். மூர்த்தி, துணை மேயர் மு. மகேஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (12.02.2026) பெருநகர சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கொருக்குப்பேட்டை, மணலி சாலையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் 96.04 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட மேம்பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே. சேகர் பாபு, மேயர் திருமதி ஆர், பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி. சேகர், எபிநேசர், ஆர். மூர்த்தி, துணை மேயர் மு. மகேஷ்குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.62.50 கோடியில் அகில இந்திய

# குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையக் கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுகிறார்!

**சென்னை, பிப்.13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் தேர்வு முகமைகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9,801 பேருக்கு இன்று (13.2.2026) பணி நியமன ஆணைகள் வழங்குகிறார். ரூ.3.38 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் கொண்ட கட்டடத்தைத் திறந்து வைத்து, ரூ.62.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.**

தமிழ்நாடு அரசின் தேர்வு முகமைகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9,801 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல் அரசின் பணிகளில் தொய்வு ஏற்படாத வண்ணம், காலிப் பணியிடங்கள் அவ்வப்போது தமிழ்நாட்டின் அனைத்து தெரிவு முகமைகள் மற்றும் வாரியங்கள் மூலம் நிரப்பப்பட்டு வருகிறது. படித்த, தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பினைப் பெற்று தரும் பணிகள் தமிழ்நாடு அரசால் தொடர்ந்து செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன், மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளும் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், திராவிட மாடல் ஆட்சியில் இளைஞர்களின் வேலை வாய்ப்புக் கனவுகளை நனவாக்கும் தொடர் முயற்சியின் ஒரு பகுதியாக இன்று (13.2.2026) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள விழாவில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9,801 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்க உள்ளார்.

**செனாய் நகரில் ரூ.62.50 கோடி மதிப்பீட்டில் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மைய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் "எளிமை ஆளுமை" திட்டத்தில் கூடுதலாக எளிமைப்படுத்தப்பட்ட 50 சேவைகள் அறிமுகம்**

அதைத் தொடர்ந்து, சென்னை செனாய் நகரில் 62 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 500 தேர்வர்கள் தங்கிப் பயிலக் கூடிய வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மைய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, "எளிமை ஆளுமை" முன்முயற்சியின் முதல் கட்டமாக பல்வேறு துறைகளைச் சேர்ந்த 10 முக்கிய சேவைகள் நெறிப்படுத்தப்பட்டு, எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்ற நிலையில், தற்போது மேலும் கூடுதலாக எளிமைப்படுத்தப்பட்ட 50 சேவைகளை முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்துகிறார்.

**அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வு நடைமுறைகளை எளிதாகக் கையாளும் "தேர்வுக்களம்" கைபேசி செயலி அறிமுகம்**

தமிழ்நாடு அரசினால் நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பது, நுழைவுச் சீட்டு, பாடத்திட்டங்கள் பதிவிறக்கம், மாதிரி வினாத்தாள்கள் என அனைத்து விதமான நடைமுறைகளையும் கைபேசியிலேயே எளிதாகக் கையாளும் விதமாக "தேர்வுக்களம்" என்னும் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதில் ஒன்றிய அரசின் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளின் விவரங்களையும் ஒரே இடத்தில் பெறும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ரூ.3.38 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் கொண்ட கட்டடத்தைத் திறந்து வைத்தல் மற்றும் அரசு ஊழியர்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ள இணைய தளத்தை (Web Portal) தொடங்கி வைத்தல்

அரசு ஊழியர்கள் செயற்கை நுண்ணறிவு, தரவு பகுப்பாய்வு, திட்டமேலாண்மை, தொடர்பாடல் உள்ளிட்ட திறன்களை மேம்படுத்திக் கொள்ள கட்டணமின்றி பயின்றிட பயிற்சிகள் வழங்கும் இணைய தளத்தை (Web Portal) தொடங்கி வைத்து, அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியின் அத்தியாவசியப் பணியாளர்களுக்கு அக்கல்லூரியின் வளாகத்திலேயே 3 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்று அடுக்ககத்தில் எட்டு குடியிருப்புகள் கொண்ட கட்டடத்தையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியானது, தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான அரசின் தொடர் முயற்சிகளின் ஒரு பகுதியாகவும், வேலைவாய்ப்பு முன்னேற்றத்தின் முன்னணி மாநிலமாகவும் தமிழ்நாட்டை உருவாக்கும் இலக்குடன், இளைஞர்களின் எதிர்காலத்திற்கான உறுதியான படியாக அமைவதுடன், தமிழ்நாடு அரசின் "வெல்வோம் ஒன்றாக" என்ற தாரக மந்திரத்துடன் இளைஞர்களின் வாழ்வினை உயர்த்துவதற்கான நிகழ்வாகும்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர், அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

### கொருக்குப்பேட்டை மணலி சாலையில் இரயில்வே 2பி சந்திக்கடவில்

# ரூ.96.04 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்ட மேம்பாலம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.02.2026) பெருநகர சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கொருக்குப் பேட்டை, மணலி சாலையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் 96.04 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட மேம்பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். மேலும், கொருக்குப்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலையில் இரயில்வே 2ஏ சந்திக்கடவில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மேம்பாலம் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப் பேட்டை மணலி சாலையில் புதிய பாலத்திற்கு அருகில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பூங்கா ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.

**கொருக்குப்பேட்டை, மணலி சாலையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் கட்டப்பட்ட மேம்பாலத்தை திறந்து வைத்தல்**

போக்குவரத்து நெரிசல் மிகுந்த கொருக்குப்பேட்டை, மணலி சாலை மற்றும் எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள இரயில்வே 2பி மற்றும் 2ஏ சந்திக்கடவுகளில் தொடர் இடைவெளிகளில் இரயில் போக்குவரத்துக்கு ஏதுவாக சுமார் 42 ஆயிரம் வாகனங்களின் போக்குவரத்து நிறுத்தம் செய்யப்படுகிறது. இதனால் இவ்விரு சந்திக்கடவுகளையும் கனரக வாகனங்களும் பொது மக்களும் கடப்பதற்கு காலதாமதமாகிறது.

இதன் காரணமாக இப்பகுதி மக்களின் 40 ஆண்டு கால கோரிக்கையினை நிறைவேற்றி, பொதுமக்களின் சிரமத்தை போக்கும் வகையிலும், காலநேரம் மற்றும் எரிபொருள் சேமிப்பை கருத்திற்கொண்டும் மேற்படி சந்திக்கடவுகளுக்கு மாற்றாக மணலி சாலை மற்றும் எண்ணூர் நெடுஞ்சாலையில் மேம்பாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 202223ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், கொருக்குப்பேட்டையில் உள்ள மணலி சாலையில் 2பி இரயில்வே சந்திக்கடவில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, தண்டையார் பேட்டை மண்டலம், கொருக்குப் பேட்டை, மணலி சாலையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் 96.04 கோடி ரூபாய் செலவில் புதிய பாலம் கட்டப்பட்டு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் மக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்து, வாகனத்தில் பயணம் செய்தார்.

இம்மேம்பாலத்தின் நீளம் 840 மீட்டர் (இரயில்வே பகுதி நீளம் 72 மீட்டர் உட்பட), அகலம் 8.40 மீட்டர் மற்றும் மேம்பாலத்தின் இரு மருங்கிலும் சேவை சாலையின் (Service Road) அகலம் 5 மீட்டர் ஆகும். இப்பாலத்தினால் கொடுங்கையூர், கொருக்குப் பேட்டை, தண்டையார்பேட்டை, எழில் நகர், கண்ணதாசன் நகர் மற்றும் நேரு நகர் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் சுமார் 1 இலட்சம் மக்கள் பயனடைவர்.

**எண்ணூர் நெடுஞ்சாலையில் சந்திக்கடவு எண். 2Aல் கட்டப்படவுள்ள புதிய மேம்பாலத்திற்கு அடிக்கல் நாட்டுதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலையில் இரயில்வே 2A சந்திக்கடவில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கும் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த மேம்பாலம் 448 மீட்டர் நீளம் (இரயில்வே பகுதி நீளம் 39.40 மீ. உட்பட), 11 மீட்டர் அகலம் மற்றும் 5 மீட்டர் அகலமுள்ள நடைபாதையுடன் கூடிய சேவை சாலைகளுடன் (Service Roads) அமைக்கப்படவுள்ளது. இம்மேம்பாலம் பவர் ஹவுஸ் சந்திப்புக்குப் பிறகு சுமார் 30 மீட்டர் தொலைவில் தொடங்கி IOCL சந்திப்பில் முடிவடைகிறது. இப்பாலப் பணிகள் முடிவுறும் நிலையில் இப்பகுதிகளைச் சார்ந்த சுமார் 1 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

**தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை மணலி சாலையில் புதிய பாலத்திற்கு அருகில் அமைக்கப்படவுள்ள பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுதல்**

தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை மணலி சாலையில் புதிய பாலத்திற்கு அருகில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பூங்காவிற்கு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த பூங்காவானது, 19,128 சதுர அடி பரப்பளவு கொண்டது. இப்பூங்காவில் பசுமைத் தாவரங்கள், சுற்றிலும் நடை பயிற்சிக்காண பாதை, அமரும் இருக்கைகள், மின்விளக்குகள் உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், எபிநேசர், ஆர்.மூர்த்தி, துணை மேயர் மு. மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19 வயதிற்குட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் எதிரணியினரின் விக்கெட்டுகளை அதிக அளவில் வீழ்த்தி இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு காரணமான தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்கள் ஆர்.எஸ். அம்ப்ரிஷ் மற்றும் தீபேஷ் தேவேந்திரன் ஆகியோருக்கு நேற்று (12.2.2026) பாராட்டு தெரிவித்து அவர்களுடன் கலந்துரையாடினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி, தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் டி.ஜே.சீனிவாசராஜ் ஆகியோர் உள்ளனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (12.02.2026) சென்னையில் ரூபாய் 7.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க புதிய தலைமை அலுவலகக் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வுசெய்து பணிகளை தரமானதாகவும் விரைவாகவும் செய்து முடிக்க பொதுப்பணித்துறை அலுவலர்களை அறிவுறுத்தினார். தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர். பூ.ஆ.நரேஷ், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் செந்தில்ராஜ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.